வைக்கவேண்டும். அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக இந்தத் திட்டம் கூடியவிரைவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 360, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

360—

செங்கம் நகர் கருமார தச்சுப்பட்டறையை விரிவாக்குதல்

***21370—டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் நகரில் உள்ள கருமார தச்சுப்பட்டறையை விரிவாக்கி கைவினைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாரியம் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரம் திருவள்ளூர் நகரில் தச்சுக் கருமார்க் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. இந்தச் சங்கம் தொடங்கியது 1964 ஆம் ஆண்டு. திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு, வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இந்த இடங்களில்தான் தச்சுக் கருமார்ப் பட்டறைகள் இருக்கின்றன. இந்த 4 பட்டறைகளிலே, செங்கம் தொகுதியில் உள்ளதுதான், 30 ஆண்டுக்காலமாக செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்தில் கிட்டத்தட்ட 100 உறுப்பினர்கள் கைவினைஞர்களாக இருந்தார்கள். பல பொருட்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வந்தார்கள். ஆனால், இப்போது ஒரு கிளார்க், ஒரு வாட்ச்மேன், இவர்கள் இருவர்தான் அங்கே இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் தச்சுப் பட்டறைகளிலே வேலை செய்யும் கைவினைஞர்கள் வேலையில்லாமல் இன்று இருக்கிறார்கள். தயவுகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய மறுவாழ்வுக்கு ஏதாவது ஆவன செய்வார்களா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கமானது, 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். தவறானது. 10-7-1960 ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது. 133

உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. அதன் பங்குத் தொகையாக 4,210 ரூபாய் கொண்டு தொடங்கப்பட்டது. சமீபகாலத்திலே பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களுக்குச் சென்ற காரணத்தால், தற்போது வெறும் 33 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கும் காரணத்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கம் நலிவு அடைந்திருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நடைமுறை மூலதனத்தை அதிகப்படுத்துவதன் மூலம், மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து, இதுபோன்ற நலிவு அடைந்த சங்கங்களை நாங்கள் விரிவாக்கம் செய்யும்பொருட்டு, வாரியமானது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

357—

வேதாரண்யம் தொகுதியில், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிக் கடன்களை ரத்து செய்தல்

***22761*—திரு. பி. வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1992-93 ஆம் ஆண்டு வேதாரண்யம் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கியில் உள்ள கடன் பாக்கி ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. பா. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரத்து செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்பு.

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள சில பாலங்களைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே. செல்வராஜ்.